# போதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கான ஒரு குறிப்பு

"ஓராண்டில் வேதம் முழுவதும்" படித்துமுடிக்கும் வகையில் சிறப்பு வேதவாசிப்புத் திட்டத்தை சில ஆண்டுகளுக்கு முன்பு 'இன்றைக்கான சத்தியம்' வெளியிட்டது.

இத்திட்டத்திற்கான விஷயங்கள் இருபிரிவுகளாயிருந்தன: "பழைய ஏற்பாட்டு ஆராய்ச்சி'' (1993, ஜுன்) மற்றும் "புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி'' (1993, ஜுலை). இன்றைக்கான சத்தியத்தின் இந்த இதழில் வேதத்தைக் கற்கும்படியான இன்னொரு திட்டமான ''எஜமானை சந்தியுங்கள்'' என்ற திட்டத்தின் கீழ் கருத்துக்களை நாம் பகிர்ந்து கொள்வோம். இது கிறிஸ்துவின் வாழ்க்கைபற்றிய ஓராண்டுக் கல்வித் திட்டமாகும். "ஓராண்டில் வேதம் முழுவதும்" என்ற திட்டத்தின் பின்தொடர்ச்சியாகவோ அல்லது இதைத் தனியாகவோ பயன்படுத்தமுடியும்.

முந்தைய திட்டத்தைப்போன்றே, "எஜமானை சந்தியுங்கள்" என்ற திட்டமும் எல்லா ஞாயிறு வேதபாட வகுப்புகளிலும் இளைஞர் முதல் முதியவர் வரை யாவருக்கும் பயன்படும்படி வடிவமைக்கபட்டுள்ளது. ஞாயிறுகாலை பிரசங்கத்துடன் இவை ஒருங்கிணைகின்றன.

டெக்ஸாஸின் கிலிபர்ன்னில் உள்ள மத்தியபகுதி கிறிஸ்துவின் சபையாரால் இத்திட்டம் உருவாக்கம் பெற்றது. எங்களது இளைஞர் மற்றும் முதியோர் வகுப்புகளில் வேதம் முழுவதிலும் ஓராண்டு பாடம் கற்றபின், அடுத்த ஆண்டை கிறிஸ்துவின் ஜீவியம் பற்றி அறிய அர்ப்பணித்தோம். அநேக விஷயங்களில் மறுகண்ணோட்டம் செலுத்தியபோது, இயேசு முன்னிருந்த நிலைமுதல் அவர் பரத்துக்கேறுவது வரை வரிசை முறைப்படி இதை அணுகத் தீர்மானித்தோம். எங்கள் படிப்புக்கு அடிப்படையாக ஜே. டபிள்யூ. மெக்கார்வியின் "நான்கு மடங்கு சுவிசேஷம்"[1] என்ற நூலைப் பயன்படுத்தினோம். இத்தொகுதியில் வசனப்பகுதிக்கான விமர்சன வரிகளோடு நான்கு

சுவிசேஷங்களின் ஒப்பீடு இணைந்துள்ளது.

சுவிசேஷங்களின் ஒப்பீடு என்ற பகுதியில், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களில் உள்ள அனைத்தையும் அவை நடந்த வரிசையில் தர முயற்சி செய்துள்ளோம். ஒரு சில அம்சங்களில் இது முடியாத விஷயமாகும்; ஏனென்றால் சுவிசேஷ ஆசிரியர்கள் யாரும் இயேசுவின் வாழ்க்கையைப்பற்றி வரிசைமுறைப்படி எழுதுவதை நோக்கமாகக் கொள்ளாமல், அவர் தேவனுடையகுமாரன் என்பதையும், அவரே இரட்சிப்பின் ஒரே நம்பிக்கை என்பதையும் வலியுறுத்தவே சம்பவங்களைத் தொகுத்துள்ளனர். எந்த ஒரு ஒப்பீடும் நூறு சதவிதம் முழுமையானதாக முடியாது. இருப்பினும், 'நான்கு மடங்கு சுவிசேஷம்' என்ற நூல் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் சம்பவங்களை வரிசைப்படுத்தி, சிறந்த விளக்கங்களையும் உடையதாயிருக்கின்றது. நாங்கள் ஒவ்வொருவரையும் தங்கள் சொந்தப் பிரதியை வாங்கும்படி உற்சாகப்படுத்தினோம்.

இப்படிப்பட்ட திட்டங்களின் முக்கிய நோக்கம், தனிப் பட்ட முறையில் வேதத்தைப் படிக்கவும், கற்கவும் ஊக்குவிப் பதேயாகும். 'நான்கு மடங்கு சுவிசேஷம்' என்ற நூலில் உள்ள தலைப்புக்களில் சில மாற்றங்களைச் செய்து அவைகளைக் கொண்டு கிறிஸ்துவின் ஜீவிய வரலாற்றின் புறக்குறிப்பைத் தயார் செய்தேன். பின்பு, வசனங்கள் ஏறக்குறைய சம எண்ணிக் கையில் வரும்படி, வாராந்திரப் பாடங்களாகப் பிரித்தேன். இந்தப் பாட அட்டவணை 256-ம் பக்கத்தில் துவங்குகிறது.

இந்த அட்டவணையைச் சில நிமிடங்கள் பாருங்கள். அதில் நாற்பத்தெட்டு வாரங்களுக்கு மட்டுமே பாடங்கள் உள்ளன. சுவிசேஷக் கூட்டங்களுக்கும், விசேஷ அழைப்பாளர்களுக்கும் நான்கு வாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும்,வருடத்தில் அநேகமுறை விசேஷத் தலைப்பு உள்ளது; வேத வாசிப்புக் கென்று புதிய பகுதி எதுவும் இல்லை. கிறிஸ்துவின் ஜீவியம் பற்றிய படிப்பு தடையின்றி நடக்கவும், அதேவேளையில் மற்ற சில தலைப்புகளை விவாதிக்கவும் இந்த ஏற்பாட்டை மத்திய சபையின் மூப்பர்கள் வேண்டிக் கேட்டனர். கொடுத்துள்ள வேதவாசிப்புக்கு ஓரிரு வாரங்கள் முன்னதாக அல்லது பின்னதாக தலைப்புகள் விவாதிக்கப்படுகின்றன; எனவே உக்கி

ராணத்துவத்தின் மைய நோக்கத்தை இவை நிறைவேற்று கின்றன. சில வேளைகளில், மூப்பர்கள், அறிவிக்கப்பட்ட இந்தப்பாடங்களை நிறுத்திவைத்து, தாங்கள் விரும்புகின்ற சில பாடங்களை நடத்தும்படி ஆசிரியர்களிடம் கூறினர். பாடங்களைத் தாமதமாகக் கற்கும் மாணவர்கள் இப்படிப் பட்ட விசேஷித்த வாரங்களில் பயன்படுத்தும்படி ஊற்சாகப் படுத்தப்பட்டனர். நீங்கள் உங்கள் சொந்தப் பாடங்களை இதன் அடிப்படையில் தயாரிக்கும்போது இந்த விசேஷித்த வாரங்களைத் தவிர்த்து, நாற்பத்தெட்டு வாரங்களுக்கும் பாடங்களை மறுபடி பிரித்து நடத்த விரும்பக்கூடும்.

பாடக்குறிப்புக்கான இன்னொரு விஷயம்: 38 மற்றும் 39 ம் வாரத்திற்கான வேதபாட வாசிப்பு இணைந்துள்ளது. இந்த வேதபாடப்பகுதியில் பிரிக்கும் பகுதி ஒன்றை நான் காண முடியாததால் இப்படிச் செய்தேன். இதில் முதல் பாதியை ஒரு வாரத்திலும், இரண்டாம் பாதியை அடுத்த வாரத்திலும் நடத்த வேண்டும்.

வகுப்பில் இருந்த மாணவர்கள் சுயமாகக் கற்றலை ஊக்கு விக்க, நான் தயாரித்த பணித்தாள்களைப் பிரதிகள் எடுத்து, அவர்கள் படிக்கும் போது பயன்படுத்தக் கொடுத்தேன். இத் தாள்களில் பின் வரும் தலைப்புகள் இருந்தன. (1) "வேத வச னம்: இவ்வாரத்தில் நான் படித்த பகுதிகள்"; (2) "வினாக்கள்: இப்பகுதிகளில் நான் புரிந்து கொள்ளாத விஷயங்கள்'' (3) "நான் படித்த வசனங்கள் 'எஜமானைச் சந்திக்க' எனக்கு எவ்விதம் உதவின? எஜமானைப்பற்றி இவ்வசனப்பகுதிகள் எனக்குப் போதித்தது என்ன''? மற்றும் (4) ''பயன்பாடு: (இவ்வசனப்பகுதி போதித்தபடி) இன்னும் அதிகமாய் நான் எஜமானை போல் ஆக என்ன செய்ய வேண்டும்." ஒவ்வொரு தலைப்பிற்கும் கீழ் மாணவர்கள் எழுத இடம் இருந்தது. இப்பணித்தாளை படிக்கும்படியும், அதிலுள்ளவற்றை சிந்தித் துப் பார்க்கும்படியும், வினாக்களுக்குப் பதில் எழுதும்படியும், வகுப்புக்கு அதைக் கொண்டு வரும்படியும், மாணவர்களை உற்சாகப்படுத்தினேன் (குடும்பங்கள் தங்கள் தினசரி தியா னத்தில் ஒரு பகுதியாக இப்பணித்தாள்களை படித்து அனை வரும் சேர்ந்து எழுதும்படி உற்சாகப்படுத்தினேன்).

வசன ரீதியாக நடத்தி முடிக்க ஆசிரியர்களுக்கு திரளான

பாடக் கருத்துக்கள் இருந்தன. எனவே, ஒவ்வொரு வாரமும் பாடங்களை விரைவான ஆராய்ச்சி செய்யும்படியும், அவ் வாரத்திற்குறிய வசனங்களில் சிலவற்றை எடுத்து, அவற்றில் அதிக நேரத்தை செலவிடும்படியும் ஆலோசனை கொடுத்தேன். இளம் தம்பதிகளுக்கான என்னுடைய வகுப்பில் கற்கும் தாள் களில் என்ன இருக்கிறது என்பதை (அவர்களுக்கு எழும்பும் வினாக்களையும் சேர்த்து) பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை கொடுத்தேன். இதன் விளைவாக வகுப்பு நேரத்தில் பெரும் பாலும் அருமையான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

ஒவ்வொரு வாரமும் குறிக்கப்பட்ட வேத வசனப் பகுதிகளைக் கொண்டே எனது அவ்வாரத்திய ஞாயிறு பிரசங் கங்கள் (மாலை பிரசங்கங்கள் உட்பட) அமைந்தன. (சில சமயங்களில் ஞாயிறு காலை பிரசங்கங்களின் தொடர்ச்சியாக மாலை பிரசங்கங்கள் அமையும்). ஆண்டு முழுவதுக்குமான இத்திட்டத்தின் தொடர்பான கருத்துக்களே புதன்கிழமை மாலை வகுப்புகளிலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. எடுத்துக் காட்டாக, ஒரு புதன்கிழமை மாலை வகுப்பு மலைப் பிரசங்கம்பற்றி அமைந்தது.இன்னொரு வகுப்பில் வேறோரு மனிதர் ஒவ்வொரு புதன்கிழமை இரவிலும் இயேசுவின் உவமைகளில் ஒன்றைக் குறித்து பேசினார்.

நாம் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய் இயேசுவைப் போல் ஆவதே, சபையின் மாபெரும் தேவைகளில் ஒன்றுகும். அவரது வாழ்க்கையைப்பற்றிய இந்த ஓராண்டு படிப்பானது குறைந்தபட்சம் இதற்கு ஒரு தொடக்கமாக இருக்கிறது.

இந்த குறிப்பிட்ட திட்டத்தை பயன்படுத்தினாலும், பயன் படுத்தாவிட்டாலும், இந்த இதழ் எஜமானை சந்திக்க உங்களுக்கு உதவும், என்று நாங்கள் நம்புகிறோம். மற்றவர் களும், எஜமானைச் சந்திக்க உதவும்படி உங்களை ஊக்கு விக்கிறோம். இதை வேத வகுப்பு மற்றும், பிரசங்கங்கள் வழியாக நிறை வேற்றுங்கள். இந்நூல் உங்களுக்கு இவ்விஷயத் தில் உதவியாய் இருந்தால் எங்களுக்கு அதை அறிவியுங்கள்.

டேவிட் ரோப்பர், இணை ஆசிரியர், இ. ச.

---

குறிப்புகள்

[1]J.W. மெக்கார்வி மற்றும் பிலிப் ஒய். பென்டல்டன், *நான்குமடங்கு சுவிசேஷம்* (சின்சினாட்டி, ஒஹியோ; ஸ்டான்டார்டு பப்ளிசிங். கோ).